**முதன்மை மாவட்ட நீதிமன்றம், விழுப்புரம் மாவட்டம், விழுப்புரம்**

**O.S.No.18/2019**

வாதி சாட்சி 1 கிருஷ்ணன் த/பெ.ராமசாமி

23.04.2025 இன்று 1969ஆம் ஆண்டு சட்டம் 10-ன் படி திருமதி.பிரமிளா தேவி, BenchClerk Gr-1 அவர்களால் சாட்சிக்கு பிரமாணம் செய்விக்கப்பட்டது.

வாதி சாட்சி 1 கிருஷ்ணன் அழைக்கப்பட்டு பிரதிவாதிகள் 1,2 மற்றும் 4 தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:

இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு ஊரில் பஞ்சாயத்து பேசப்பட்டது என்றும் அதில் எனக்கு பொதுகடனில் ரூ.14,75,000/-மும் 2ம் பிரதிவாதிக்கு ரூ.15,40,000/-மும் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்றும் அதன்பிறகு சொத்துக்களை பாகம் பிரித்துக்கொள்ளவேண்டும் என்றும் அந்த பஞ்சாயத்தில் பேசி முடிவு செய்யப்பட்டது என்றும் சொன்னால் அவ்வாறு பஞ்சாயத்து எதுவும் நடக்கவில்லை. அந்த பஞ்சாயத்து முடிவு படி 2ம் பிரதிவாதி ராஜசேகர் 5ம் பிரதிவாதி தணிகையரசுவிடம் ரூ.11 லட்சம் கொடுத்து கடன் பைசல் செய்துள்ளார் என்றால் இல்லை. அந்த பஞ்சாயத்து முடிவு ஏற்பட்ட பிறகு நான் அதனை ஒப்புக்கொள்ளாமல் சண்டை போட்டுக்கொண்டு அதன்பிறகு இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 5 முதல் 7 பிரதிவாதிகளான தணிகையரசு, செந்தில்குமார் மற்றும் வல்லம் இணைசார்பதிவாளர் ஆகியோர் இந்த வழக்கிற்கு தேவையற்ற தரப்பினர்கள் என்றால் சரியல்ல.

3ம் பிரதிவாதி செல்வி மற்றும் 4ம் பிரதிவாதி சித்ரா ஆகியோருக்கு தலா 50 சவரன் நகைபோட்டு நான் திருமணம் செய்துவைத்ததாக இந்த வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு எனக்கும் என் தாயார், சகோதரர் மற்றும் சகோதரிகளுக்கும் இடையில் விரோதமும் இல்லை என்றால் சரிதான். பொதுகுடும்ப கடன்களை நானும் என் தாயார், சகோதரர் மற்றும் சகோதரிகள் அவர் அவர் பாகத்திற்கு

வரும் கடனை ஏற்றுக்கொண்டு பொதுகடனை தீர்த்த பிறகு சொத்துக்களை பாகம் பிரித்துக்கொள்ள எனக்கு சம்மதமா என்றால் சம்மதம். 5 மற்றும் 6 பிரதிவாதிகளின் தூண்டுதலின் பேரில் தான் நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. என் சகோதரி செல்வி உடல்நிலை சரியில்லாமல் இருந்தாரா என்றால் உடல்நிலை சரியில்லாமல் இருந்தார். 5ம் பிரதிவாதி தணிகையரசு செஞ்சி சார்பு நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்திருந்தாரா என்றால் அது எனக்கு தெரியாது. நான் இந்த வழக்கு தாக்கல் செய்ததற்கு வழக்குமூலம் இல்லை என்றும் 1 முதல் 4 பிரதிவாதிகளை அலைகழிக்கவேண்டும் என்ற எண்ணத்தில் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றும் சொன்னால் சரியல்ல. இவ்வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

(3 மற்றும் 5 முதல் 7 பிரதிவாதிகள் அழைக்கப்பட்டும் ஆஜரில்லை, அவர்கள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜராகவில்லை. 6ம் பிரதிவாதி தரப்பில் ஏற்கனவே இந்த வழக்கிற்கு ஆட்சேபனை இல்லை என்று தெரிவிக்கப்பட்டு 25.02.2019 அன்று பதிவு செய்யப்பட்டுள்ளது, எனவே 3,5 மற்றும் 7 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை என்று பதிவு செய்யப்படுகிறது)

மறுவிசாரணை இல்லை.

Sd/- A.Manimozhi
Principal Sessions Judge,
Villupuram.